**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82/2023</u>**

பெயர் : அமுதசுரபி P.W.1. Cross

க/பெ. : இன்பநாதன்

தேதி : 25.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

(வாதி தரப்பு சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு IA No. 2/2025 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1. ஆனந்தவள்ளி எழுதிவைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தில் 2வது சாட்சி கையொப்பம் செய்துள்ள வடிவேல் என்பவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் அவருக்கு முடக்கு வாதம் உள்ளதால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது. ஆனந்தவள்ளி இறப்பதற்கு முன்னர் அவரால் கையொப்பம் செய்யப்பட்டுள்ள வேறு ஆவணத்தின் மூலம் உயிலில் உள்ள கையொப்பம் ஆனந்தவள்ளி என்பவருடையது தான் என்பதை நிரூபிக்க நான் கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன முறையில் நிரூபிக்காவிட்டால் ஆனந்தவள்ளியின் வாரிசுதாரர் நான் தான் என நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

2. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ள விபரங்களை நான் நிரூபிக்காததால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. உயிலில் கையொப்பமிட்டுள்ள சாட்சிகள் எனக்கு ஆதரவான மற்றும் ஆதாயத்திற்கான சாட்சிகள் என்பதால் அவர்களை உயிலில் சாட்சிகளாக கையொப்பம் இடசொல்லி பொய் சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**